## 98. ஜெபத்தை கேட்கும் எங்களின்

### பல்லவி

ஜெபத்தை கேட்கும் எங்களின் தேவனே
மாம்சமான யவரும் வருவார்கள்

### அனுபல்லவி

*பக்தியுள்ளவனை உமக்காக*
*தெரிந்து கொள்ளுவேன் என்றீரே*

### சரணங்கள்

1. சிலுவையில் தாகமாய் இருக்கிறேன் என்று
உரைக்கும் சத்தம் கேட்கின்றதே
ஆத்தும பாரத்தை தாருமே
அதுவே என் வாழ்வாய் மாற்றுமே
- ஜெபத்தை கேட்டும்

2. தேவனை அறியாத கூட்டங்கள்
எத்தனையோ கோடி எத்தனையோ
ஆத்தும தாகத்தால் நிரப்புமே
உமக்காக அறுவடை செய்திட
- ஜெபத்தை கேட்டும்

3. இருளிலே இருக்கும் ஜனங்களுக்கு
சுவிசேஷ வெளிச்சத்தை காட்டிட
எங்கள் மேல் இருக்கும் கடமைகளை
உணர்ந்து செயல்பட வேண்டுமே
- ஜெபத்தை கேட்டும்